விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 05 புதன்கிழமை (18.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 120

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## மனித உரிமைக் குழுவில் குடும்பஸ்தர் சரண்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஒருவர் நேற்று யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளார்.

இவர் கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் திருமணம் முடித்து வசித்து வந்ததாகவும் தொடர்ச்சியாக இவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-3)

## ஜனாதிபதி - மங்களவுக்கிடையேயான சமரச முயற்சியில் அலவி மௌலானா

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை ஒன்றிற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகவலினை மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா வெளியிட்டுள்ளார். தாம் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்து இது தொடர்பில் பேசியதாக அலவி மௌலானா குறிப்பிட்டுள்ளார்.

சந்திப்பின்போது மங்கள சமரவீர எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. இந்நிலையில் ஜனாதிபதி வத்திக்கான் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் மங்கள சமரவீரவை நேடியாகச் சந்திக்க வைக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

முரண்பாடுகள் காரணமாக மங்கள சமரவீர, அநுரா (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.யில் பரா வெளிச்சம் வீசி நேற்றிரவு விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

மிக்-27 ரக விமானங்கள் நேற்றிரவு 8.20 முதல் 8.35 மணிவரை கிளிநொச்சிப் பிரதேசத்தில் வான் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

மிக்-27 விமானம் ஒன்று 15 ற்கும் அதிகமான பரா வெளிச்சக் குண்டுகளை வீசி வெளிச்சத்தினைப் பரப்ப மற்றொரு மிக்-27 ரக வானூர்தி குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மிக்-27 ரக விமானங்கள் அடையாளம் (04 ஆம் பக்கம் பார்க்க)

# அனைத்து சமாதான செயற்பாடுகளுக்கும் அரசாங்கத்திற்கு முழுமையான ஆதரவு!

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ் - சிங்களப் புத்தாண்டின் பின்னராவது விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அரசின் அனைத்து சமாதான செயற்பாட்டு விடயங்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஆதரவை வழங்குமெனவும் அக் கட்சி கூறியுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## இத்தாலி வெளிவிவகார அமைச்சருடன் போகொல்லாகம சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)



இத்தாலிக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் மசிமோலவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பொதுமக்களை இலக்கு வைத்து நடாத்தப்படும் தாக்குதல் உட்பட பயங்கரவாதச் செயல்களைக் கண்டிப்பதாக இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோதக் குடியேற்றங்கள், விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரிப்பதைத் தடுப்பதற்கு இத்தாலி அரசாங்கம் இலங்கைக்கு உதவும் என உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டு வரும் மோதல்கள் குறித்தும் இத்தாலிய வெளிவிவகார அமைச்சருக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் விளக்கிக் கூறியுள்ளார். (ச)

## புங்குடுதீவில் மீட்கப்பட்ட சடலத்தை மரபணுப்பரிசோதனைக்கு உட்படுத்த முடிவு

### ஜிம்பிறவுண் அடிகளாருடையதா எனச் சந்தேகம்

(கொழும்பு)

புங்குடுதீவுப் பகுதியில் வைத்து கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட சடலத்தை மரபணுப்பரிசோத னைக்கு உட்படுத்தவுள்ளதாக வெளியுறவு அமைச்சு அறி வித்துள்ளது.

அச் சடலம் கடந்த வருடம் ஆகஸ்ட் 22 ஆம் திகதி காணாமல் போன அல்லைப்பிட்டி பங்குத்தந்தை ஜிம்பிறவுண் அடிகளாரின் சடலமாக இருக்கலாமென சந்தேகம் எழுந்துள்ள நிலையிலேயே இந்த மரபணுப்பரிசோதனை நடாத்தப்படவுள்ளதாக வெளியுறவு அமைச்சு கூறியுள்ளது.

இந்த நிலையில் இரகசியப் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவானின் அனுமதியுடன் சடலத்தை இராகமைக்கு எடுத்துச் சென்று எதிர்வரும் 20 ஆம் திகதி மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளனர்.

மரபணுத்துறை நிபுணர் பேராசிரியர் ரவீந்திர பெனாண்டோவினால் மேற்கொள்ளப்படவுள்ள இப்பரிசோதனையினால் மரணத்திற்கான (04 ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.பல்கலை மாணவன் வெறியாட்டம் தமிழ்ப் பேராசிரியர் உட்பட 32 பேர் பலி

அமெரிக்காவின் வெர்ஜினியா மாநிலத்தில் உள்ள வெர்ஜினியா ரெக் என்ற பல்கலைக்கழகத்தில் அங்கு கல்வி கற்ற மாணவன் ஒருவன் நேற்று முன்தினம் மேற்கொண்ட கொலை வெறியாட்டத்தில் தமிழ்ப்பேராசிரியர் உட்பட 32 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த வெறியாட்டத்தை நடத்திய மாணவன் இறுதியில் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக நம்பப்படுகின்றது.

குறித்த பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பாட நெறி ஒன்றைக் கற்றுவந்த தென்கொரிய மாணவனான செங்கொய் சோவினால் நடத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வெறியாட்டத்தில் குறைந்தது 15 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். குறித்த பல்கலைக்கழத்தில் குறித்த மாணவன் மேற்கொண்ட இரு வேறு கொலை வெறிச் சூட்டுச் சம்பவங்களிலேயே (04 ஆம் பக்கம் பார்க்க)

## தாயும் மகனும் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் தாயும் மகனும் ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முத்தையா சிவமணி (வயது-58), அவரது மகன் முத்தையா பாஸ்கரன் ஆகியோரே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களாவர். கொல்லப்பட்ட இருவரும் தமது சொந்த இடமாகிய வாகரைப் பகுதியிலுள்ள பனிச்சங்கேணி கோவிற்குடியிருப்பில் இருந்து இடம் பெயர்ந்து வாழைச்சேனையில் வசித்து வந்த போது, மீண்டும் வாகரைக்கு அழைத்துச் சென்று குடியமர்த்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## இலங்கை - அவுஸ். போட்டியின் போது மைதானத்தினுள் தமிழீழத் தேசியக் கொடி

### ரசிகர்கள் அதிர்ச்சி

(ஜமெக்கா)

மேற்கிந்தியத் தீவுகளில் அவுஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தமிழீழத் தேசியக் கொடியைத் தாங்கியவாறு மைதானத்திற்குள் ஓடி ரசிகர் ஒருவர் எல்லோரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கை வீரர்கள் இலங்கைக் கொடியுடன் அவுஸ்திரேலியர்கள் தமது நாட்டுக் கொடியுடன் மைதானத்திற்குள் (04 ஆம் பக்கம் பார்க்க)



படம்:- ரொய்ட்டர்

## கொட்டாஞ்சேனையில் ஆட்டோச் சாரதி மீது சூடு

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை கிறீன் லேன் முஸ்லிம் வித்தியாலயத்திற்கு முன்னால் நேற்று முற்பகல் ஆட்டோச் சாரதி ஒருவர் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியாகியுள்ளார்.

ஆட்டோவில் வந்த இனந்தெரியாத நபர்களே இவ் ஆட்டோச் சாரதி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த ஆட்டோச் சாரதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிப் பிரயோகத்திற்கான காரணம் தெரியவில்லை எனவும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

## ஆஸியின் வெற்றி தொடர்கிறது இலங்கை 7 விக்கெட்டுக்களால் தோல்வி

இலங்கையை ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அவுஸ்திரேலியாவின் வெற்றி நடை தொடர்கின்றது. மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் கிரேனடாவில் நடைபெற்ற சுப்பர்-8 ஆட்டத்தில் இலங்கை - அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜயவர்த்தன முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அணித்தலைவர் மஹேல ஜயவர்த்தன 72 ஓட்டங்களையும் சாமரசில்வா 64 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக நதன் பிறக்கன் 4 விக்கெட்டுகளையும் தைட்,மெக்ராத் மற்றும் ஹொக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 227 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி இலங்கை அணியின் முன்னணிப் பந்து வீச்சாளர்கள் முரளி ,வாஸ் இல்லாத நிலையில் 42.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 232 ஓட்டங்களைப் பெற்று ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.


இதில் ரிக்கிப்பொண்டிங் 66 ஓட்டங்களையும் அன்ரூ சைமன்ஸ் 63 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக ரசல் ஆனல்ட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஆட்டத்தின் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் நதன் பிறக்சன் தெரிவானார்.

இதேவேளை இப் போட்டியில் இலங்கை அணியின் முன்னணிப் பந்து வீச்சாளர்களான முத்தையா முரளிதரன்,சமிந்த வாஸ் ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கிரிக்கெட் போட்டி பார்ப்பதால் 25 இலட்சம் மின் அலகுகள் விரயம்

தற்போது உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடைபெறுவதனால் நாளாந்தம் 25 இலட்சம் மின் அலகுகள் மேலதிகமாக விரயமாகுவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நடைபெறும் போட்டிகளுக்கமைய இவ் மின் அலகுகளில் மாற்றங்கள் ஏற்படுவதுடன் எனினும் கிரிக்கெட் போட்டிகளைப் பார்ப்பதற்காக இவ்வாறு மின்சாரம் விரயமாக்கப்படுவதனால் தேசிய மின்சார விநியோகத்தில் பாதிப்புக்கள் ஏற்பட மாட்டாது எனவும் மின்சாரசபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பிள்ளேபெரும தெரிவித்துள்ளார். போட்டிகளைப் பார்க்கும் போது தேவையற்ற மின் குமிழ்களை பாவனைசெய்ய வேண்டாம் என அவர் பொதுமக்களை கேட்டுள்ளார்.(ச-3)




## மட்டக்களப்பில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த 938 குடும்பங்கள் கிளிவெட்டிக்கு மாற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருந்த 938 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மூதூர் கிளிவெட்டிப் பிரதேசத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கிளிவெட்டியில் உள்ள மூதூர் கிழக்கைச் சேர்ந்த 217 குடும்பங்களும் மூதூர் தெற்கைச் சேர்ந்த 384 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 883 பேரும் வெருகல் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 145 குடும்பங்களைச் சேர்ந்த 517 பேரும் சேருவில பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 192 குடும்பங்களைச் சேர்ந்த 621 பேருமாக மொத்தம் 3 ஆயிரத்து 21 பேர் கிளிவெட்டி நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை என்று தெரிவிக்கப்படும் அதேவேளை முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இம் மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இம் மக்கள் குளிப்பதற்கும் ,தமது உடைகளை கழுவுவதற்கும் பாத்திரங்களை துப்புரவு செய்வதற்கும் சுமார் அரைக்கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அல்லை வாய்க்காலுக்குச் சென்று வரவேண்டியுள்ளது.

இது அவர்களுக்கு பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆட்படுத்தியுள்ளது. இப் பிரதேசத்தில் நிலவும் கூடிய வெப்பநிலை காரணமாக தகரத்தால் அடைக்கப்பட்டுள்ள கொட்டில்களில் இருக்க முடியாதுள்ளது.

மின்சார வசதி ,மலசல கூட வசதி போதாத நிலையும் உள்ளது. அத்துடன் கண்நோய் , வயிற்றுழைவு , அம்மை போன்ற தொற்று நோய்களும் தோன்றக்கூடும் எனவும் மக்கள் தெரிவித்தனர். (ச)

## மல்லாகம் நீதிமன்றத்தில் பொருட்கள் ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாக மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ,உரிமை கோரப்படாத பொருட்களான துவிச்சக்கர வண்டிகள் , தொலைக்காட்சிப் பெட்டிகள் ஸ்ரான் றில்லர், செல்போன்,கோடாரிகள், கத்திகள்,மின்சார விசிறி,ரோஜ்,கல்லுகள் என்பன எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக பதிவாளர் ம.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்னர் விற்பனைப் பொருட்களை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்கு உடன் பணம் செலுத்திநீதிமன்றவளவிலிருந்துஅப்புறப் படுத்தவேண்டுமென அவர் அறிவித்துள்ளார். (ச)

## ஆங்கில மொழி மூலமான விஞ்ஞான பாடத்திற்கு 14 மாணவர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில மொழிமூல விஞ்ஞான பாடத்திற்கு 14 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி பதிவினை மேற்கொள்ளுமாறு அதற்கான ஆவணங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பீடாதிபதி எஸ்.கே. லோகநாதன் அறிவித்துள்ளார்.

தெரிவான யாழ்.மாணவர்களின் விபரம் வருமாறு, எம்.சோபனா (மணியகாரன் வளவு கைதடி தெற்கு),ரி.சுபேதா (சா.வடக்கு மீசாலை), ரீ.கௌசல்யா (29 தபாற்கந்தோர் ஒழுங்கை சுண்டிக்குளி),ரி.தியாகராசா (விக்னேஸ்வரா வீதி,சங்கானை), கே.கஜன்தா 16/9 சீனியர் ஒழுங்கை கலட்டி), கே.சுபவீனா (மஞ்சத்தடி இணுவில் கிழக்கு), எம்.நிலுஷினி (14/15 ஏ.ஆர்.கே.ஒழுங்கை உடுவில்) ,எஸ். தவலங்கி ( விக்னேஸ்வரா ஒழுங்கை அச்சுவேலி தெற்கு), எம்.ஜெரோம் சிலாவத்தை முல்லைத்தீவு. (கு)



இலங்கை வங்கியின் கோப்பாய் விரிவாக்கற்கிளை ஆரம்ப விழாவன்று நகை அடைவு பிடிக்கும் பகுதியினை உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் ஆரம்பித்து கடன் வழங்குவதை படத்தில் காணலாம்.

## தமிழ் மொழிமூல பாடநூல்களில் பிழைகள் இருப்பதாக சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ்மொழியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டு வரும் இலவச பாட நூல்களில் பிழைகள் காணப்படுவதாக கல்வி அமைச்சரிடம் முறையிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இவ் விடயம் குறித்து அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை சந்தித்து முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த விடயங்கள் தொடர்பில் அதிகாரிகளை அழைத்து காரணங்களை கேட்டறிவதாக அமைச்சர் சிவசக்தி ஆனந்தனிடம் உறுதியளித்துள்ளார். இவ் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட சமூகக்கல்வி பாடத்திட்டத்தின் ஆறாம் தரம் தொடக்கம் பத்தாம் தரம் வரையிலான நூல்கள் வரலாறு, புவியியல் மற்றும் குடியுரிமைக் கல்வி என்ற வகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இது தமிழ் மொழி மாணவர்களுக்கு பொருத்தமற்ற பாட அலகாக விளங்குகின்றன. அத்துடன் தமிழ்,முஸ்லிம் மாணவர்களின் பண்பாட்டை வெளிக்காட்டாமல் தனியாக சிங்கள கலாசாரத்தை பின்புலமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

சிங்கள மன்னர்களுக்கு முன்னுரிமை வழங்கி தமிழ் மன்னர்களின் வரலாறுகளின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டுள்ளது.

குளக் கோட்டன், சங்கிலியன், பண்டார வன்னியன் போன்ற தமிழ் மன்னர்களின் வரலாறுகள் இந்த பாடவிதானத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இப் புறக்கணிப்பு மாத்திரமல்லாமல் தவறான வரலாறுகளின் திணிப்பாகவும் உள்ளதாக சிவசக்தி ஆனந்தன் கல்வி அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-3)

## சட்ட ஒழுங்கு விடயங்களில் கருணா குழுவினர் ஈடுபாடு

### அமைச்சர் ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு எதிராக கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் நாட்டில் தற்போது நடைபெற்று வரும் மோதல்களில் ஒரு பேரழிவான நிலையை ஏற்படுத்தும் என முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது; நான் இந்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போதும் அனைத்துக்கட்சி குழு கூட்டங்களின் போதான சந்திப்பின் போதும் எடுத்துக் கூறியுள்ளேன்.

மிகவும் நெருக்கடியான பகுதிகளில் கருணா குழுவினர் சட்ட ஒழுங்கில் தலையிடுவதனை தடுக்கும்படி ஜனாதிபதி சட்ட ஒழுங்குகளை மேற்கொள்ளும் அதிகாரிகளிடம், உள்ளூர் அதிகாரிகளிடமும் பணித்திருந்தார்.

கருணா குழுவினரால் முஸ்லிம் மக்களின் மீது மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் அவர்கள் முஸ்லிம் சமூகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்று வருவதை காட்டுகின்றது. இது தற்போது நடைபெற்று வரும் மோதல்களை மற்றுமொரு பரிமாணத்திற்கும் இட்டுச் செல்லும் என ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-1)

## தகைமை காண் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் சிவில்/படவரைஞர் பதவிகளின் பயிலுநர் தரங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களை இலங்கை தொழில்நுட்பவியில் சேவையின் சிவில்/படவரைஞர் வகுப்புII பிரிவு 'ஆ' பதவிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான தகைமை காண் பரீட்சைக்கு தோற்ற தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு கோரியுள்ளது. விண்ணப்ப இறுதித்திகதி ஏப்ரல் 30 ஆகும். இது தொடர்பான விபரங்களை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாண பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**மணப்பெண் தேவை**

திருநெல்வேலி (இந்து) 1977 மிருகசீரிடம் மிதின ராசி 36 3/4 கிரகபாவம் 5' 7'' உயரம் G.C.E. O/L மோட்டார் ரீவைண்டிங் கடை உரிமையாளரான மணமகனுக்கு படித்த அழகான மணப்பெண் தேவை. தொடர்புக்கு:- திரு.SK சிவகரன் (அமைப்பாளர்) சிவாலயா சர்வதேச திருமண நிலையம் 389 C, இராமலிங்கம் வீதி திருநெல்வேலி (பூங்கனிச்சோலை அருகில்) யாழ்ப்பாணம்.

T.P:-0775834982 (830)

காலம் நம்மை விரைவில் ஏமாற்றி விடும். நாம் காலம் தாழ்த்தாது கடமையைச் செய்ய முனைந்தால் நாம் காலத்தை வென்று விடலாம்.

—சுவாமி இராமதாசர்

வலம்புரி

## யப்பானின் சமாதான முயற்சி காத்திரமாக அமையட்டும்

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அவரின் வருகை பற்றிய அறிவிப்பு இலங்கை மக்களிடையே மிகுந்த ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் நோர்வே ஆற்றிய பங்களிப்புக்கு அடுத்தபடியாக யப்பானின் பங்களிப்பைக் குறிப்பிடலாம்.

அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதில் யப்பான் மிகவும் இறுக்கமான கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது.

இந்நிலையில், நோர்வேயின் சமாதான முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்ததுடன், அந்நாட்டின் அனுசரணையின் பயனாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே கைச்சாத்தான யுத்த நிறுத்த உடன்படிக்கையும் உயிர்விடும் தறுவாயில் உள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை காரணமாக நிகழ்ந்த ஏ-9 பாதை திறப்பு கடந்த வருடம் ஆகஸ்ட் 11 ஆம் திகதியுடன் மூடப்பட்டதைத் தொடர்ந்து யுத்த நிறுத்த உடன்படிக்கையும் செயலிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

ஆக, ஒட்டு மொத்தத்தில் நோர்வேயின் ஏழு வருட சமாதான முயற்சிகள் எதையுமே பெற்றுத் தராமல் போனதென்றே கூறவேண்டும்.

சமாதான முயற்சிகள் தோல்வி கண்டதன் காரணமாக கடந்த ஒரு வருடத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, ஆட்கடத்தல், காணாமல் போதல் என்ற பயங்கரம் எங்கும் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றது.

சுருங்கக்கூறின் ஒவ்வொரு நாளும் சராசரியாக ஆயுத தரப்பல்லாத பத்துப்பேர் கொலை செய்யப்படுகின்றனர். இது குறித்து காலவரையறைக்குள் இடம்பெறக்கூடிய யுத்தத்தின் அழிவுகளை விட அபாயமானதாகும்.

கடந்த ஒரு வருட காலத்திற்குள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ள இலங்கை நிலைவரத்தில் மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கும் நோக்குடன் யப்பான் தூதுவர் யசூசி அகாசி இலங்கை வருவது எல்லோருக்கும் ஆறுதலைத் தரக்கூடிய விடயமே.

எனினும் இலங்கைக்கு வரும் யப்பான் தூதுவர் காலம் கடத்தாது பேச்சுவார்த்தையை உடனடியாக மேற்கொள்ளும் வகையில் அரசு- விடுதலைப்புலிகள் ஆகிய இருதரப்புடனும் பேச்சு நடத்த வேண்டும்.

அதேசமயம் வடக்குக்கிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை நேரில் அவதானிப்பதும் அவரின் முதன்மைப் பணியாக இருக்கும்.

# துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தல் குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் முறையீடு

(கொழும்பு)

கொழும்பில் கடத்திச் செல்லப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் பேராசிரியருமான எஸ்.ரவீந்திரநாத்தின் விடுதலைக்கு உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபையில் முறையிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத் தொடர்பான விபரங்களைக் கண்டுபிடிக்கவும் அவரை விரைவாக விடுதலை செய்யுமாறு கோரியும் அவரது குடும்ப உறுப்பினர்களினால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கொழும்பு வாட் பிளேசில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற விஞ்ஞான மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளச் சென்ற போது அவர் கடத்திச் செல்லப்பட்டார்.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை அமைப்பின் தலைவர் லூயிஸ் ஆபருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; பேராசிரியர் ரவீந்திரநாத்தின் விடுதலைக்கு உதவுமாறு உயர் அதிகாரிகளை நாம் அணுகியிருந்தோம். ஆனால் அது முடியவில்லை.

எல்லா மட்டத்திலும் ஒரு அசாதாரண அமைதியே நிலவுகின்றது. இது தொடர்பாக செயற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை. அவரை நாங்கள் பிரிந்து சொல்ல முடியாத துன்பத்திலும் வேதனையிலும் வாழ்கின்றோம். கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் கிழக்குப் பல்கலைக்கழக கலைபீடாதிபதியான கலாநிதி பாலசுகுமாரை கடத்திச் சென்றதுடன் அவரை விடுவிக்க வேண்டுமானால் பேராசிரியர் ரவீந்திரநாத்தை பதவியில் இருந்து விலகுமாறு வற்புறுத்தியிருந்தனர்.

அதன் பின்னரும் அவருக்கு பதவி விலகுமாறு பல மிரட்டல்கள் வந்திருந்தன. அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் சமர்ப்பித்திருந்தார். ஆனால் அது ஜனவரி மாதம் தான் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

பதவி விலகல்தான் கடத்தல்காரர்களின் முக்கிய நிபந்தனையாக இருந்ததாக நாம் எண்ணியிருந்தோம். ஆனால் அவர் தற்பொழுது எங்கு உள்ளார் என்பது எமக்குத் தெரியாது. அவரது பாதுகாப்பு மற்றும் உடல் நிலை தொடர்பாக கடத்தல்காரர்கள் எமக்குத்தெரிவிக்க வேண்டுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# ரணிலின் கனவு ஒருபோதும் பலிக்காது

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை எதிர்வரும் 11 வருடங்களுக்கு எவராலும் அசைக்க முடியாது. அதுவரை ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து அரசாங்கத்தில் இணைந்துகொண்டுள்ள 17 பேரும் அரசில் இருந்து விலக மாட்டார்கள்.

எதிர்வரும் மே மாதத்திற்குப் பின்னர் மேலும் சில ஐ.தே.க.எம்.பிக்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளனர். அதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று வர்த்தக வாணிபத்துறை மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் ஆட்சியைக் கைப்பற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் கனவு ஒரு போதும் நனவாகாது. கிரகமாற்றங்களின்படி ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்று ரணில் கனவு காணுகின்றார்.

அரசாங்கத்தில் இருந்து மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டுள்ள எட்வேட் குணசேகர அரசியல் ரீதியில் தவறிழைத்து விட்டார் என்று அவர் கூறினார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை எதிர்வரும் 11 வருடங்களுக்கு எவராலும் அசைக்க முடியாது. அரசாங்கத்திலிருந்து விலகி மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கொண்ட எட்வேட் குணசேகர அரசியல் ரீதியில் தவறிழைத்துவிட்டார்.

அவருக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டிருந்தால் எம்மிடம் கூறியிருக்கலாம். அல்லது எமது மாற்றுக்குழுவின் தலைவர் அமைச்சர் கரு ஜயசூரியவிடம் கூறியிருக்கலாம். எமது மாற்றுக்குழு வாரம் ஒரு தடவை கூடுகிறது. ஆனால் எட்வேட் குணசேகர தவறாக வழிநடத்தப்பட்டு விட்டார். அவர் நினைப்பது போன்று ரணில் விக்கிரம சிங்காவினால் எதிர்வரும் மே மாதம் ஆட்சி அமைக்க முடியாது.

இன்று அல்ல நாளை என்று ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சி அமைக்கும் முயற்சி தொடர்ந்து கொண்டிருக்கும். ஆனால் அதிகாரத்தைப் பிடிக்கமுடியாது. இதனை தற்போது உணர்ந்து கொண்டுள்ள சில எம்.பிக்கள் மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றனர்.

அவர்கள் மே மாதத்தின் பின்னர் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர். ஐ.தே.கவின் மிகவும் பிரபலமான சிலரும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளனர். இதேவேளை நாட்டில் மனித உரிமை மீறப்படுவதாக பெரியளவில் கூறப்படுகின்றது. ஆனால் 1989 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது நாட்டில் மனித உரிமை மீறப்படவில்லை என்றே கூறவேண்டும்.

அன்று இளைஞர்கள் தீயிட்டுக்கொழுத்தப்பட்டதனை நாங்கள் கண்டுள்ளோம். ஆனால் தற்போது அரசியல் நோக்கத்திற்காக பாரியளவில் மனித உரிமை மீறப்படுவதாகக் காட்டப்படுகிறது. சில தனிப்பட்ட விடயங்களும் அரசியல் நோக்கங்களுக்காக மனித உரிமை மீறல்களாக காட்டப்படுகின்றது. (ச)

# நெடுந்தீவுக்கு புதிய மின் பிறப்பாக்கி

கடந்த இரு மாதங்களாக இருளில் மூழ்கிக்கிடந்த நெடுந்தீவுக்கு புதிய மின்பிறப்பாக்கி இயந்திரம் கொண்டு வரப்பட்டுள்ளதாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நெடுந்தீவில் இயங்கிய மின் பிறப்பாக்கி பழுதடைந்ததால் இப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கியிருந்தது. இப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் வைத்தியசாலை, அரச அலுவலகங்களின் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இதனையடுத்து கடற்படையினர் திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் கடந்த வாரம் காங்கேசன்துறைக்கு இந்த மின்பிறப்பாக்கி எடுத்துவரப்பட்டு பின்னர் கடற் படையினரின் கடற்கலம் ஒன்றின் உதவியுடன் நெடுந்தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. (ச)

# ஈழத்தமிழர்கள் ஏழுபேர் மின்சார விபத்தில் படுகாயம்

(சென்னை)

தமிழ்நாடு தாராமங்கலம் பகுதியில் இலங்கையில் இருந்து தஞ்சமடைந்த மக்கள் தங்கியிருந்த முகாமில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கினால் ஏற்பட்ட விபத்தில் ஏழு ஈழத்தமிழர்கள் உடல் கருகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாகப் பெய்த அடை மழை மற்றும் காற்று காரணமாக அறுந்திருந்த மின்சாரக் கம்பயில் சிக்கியே இவர்கள் உடல் கருகியுள்ளனர்.

மின்சாரம் தாக்கியதில் வயோதிபர் ஒருவரை காப்பாற்றுவதற்காகச் சென்ற மேலும் ஆறுபேரே மின் தாக்கத்திற்குள்ளாகினர். அருளாயி (வயது 55), நாகலட்சுமி (வயது 27), சேரன் (வயது 25), சர்மிளா (வயது 12), சுமதி (வயது 12), சிறீதரன் (வயது 37), வினித் (வயது 21) ஆகியோரே காயமடைந்தனர். (ச)

# இலங்கையில் இவ்வாண்டு மாத்திரம் 300 பேர் காணாமல் போயுள்ளனர்

## ஆசிய மனித உரிமை அமைப்புத் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் இவ்வாண்டு மாத்திரம் சுமார் 300 பேர் காணாமல் போயுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக ஆசிய மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு சுமார் 6 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளதாக அவ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந் நிலையில் தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் பௌச்சர் இலங்கையில் ஜனநாயகத்தை மேம்படுத்தும் முறைகள் குறித்து குறிப்பிட்ட அம்சங்களை ஆசிய மனித உரிமைகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

1970 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் காணாமல் போகும் சம்பவங்கள் இடம் பெற்று வந்துள்ளன. இவை யாவும் அதிகாரப் பிரிவுகளினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந் நிலையில் காணாமல் போன சம்பவங்களை தடுக்க உரிய சட்ட முனைப்புக்கள் ஏற்படுத்தப்படுவதே சிறந்த வழியாகும் என ஆசிய மனித உரிமைகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-3)

# சர்வதேச மன்னிப்புச் சபை பாப்பரசருக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் சமகால நிகழ்வுகள் தொடர்பாக மன்னிப்புச்சபை புனித பாப்பரசர் 16 ஆவது பெனடிக்கின் கவனத்திற்கு கடித மொன்றை அனுப்பியுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கும்போது இது தொடர்பாக முனைப்புக்களுக்கான பரிந்துரைகளை புனித பாப்பரசர் மேற்கொள்ள வேண்டுமென அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ச-3)

# மன்னார் மீனவர்கள் நால்வர் புங்குடுதீவுக் கடலில் கைது

(மன்னார்)

மன்னார் கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன 13 மன்னார் மீனவர்களில் நால்வர் புங்குடுதீவில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களான மன்னாரைச் சேர்ந்த எஸ்.சந்திரகுமார், என்.சுதர்சன், எஸ்.கோபிநாத், ரி.சுரேஷ் ஆகிய நான்கு மீனவர்களையும் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

குறித்த நான்கு மீனவர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்திய அரசாங்கம் உதவ வேண்டும்

## அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வினைஏற்படுத்தி இனப்பிரச்சினைக்குத் துரிதகதியில் தீர்வு காண இந்தியா உதவ வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய வகையிலான புதிய அரசியல் கலாசாரத்தினை இலங்கை அரசுடன் பேசி இந்தியா உருவாக்க வேண்டும்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் சமூக அபிவிருத்தி மற்றும்சமூக சமத்துவமின்மையைப் போக்கும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார். இனப்பிரச்சினை விவகாரத்தில் இனியும் பார்வையாளராக இருக்காது இந்தியா பங்காளியாக மாற வேண்டும். இதனையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்திற்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் சந்திரசேகரன், இவ்வாரம் தமிழக முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதி, மத்திய அமைச்சர்களான ப.சிதம்பரம், தயாநிதி மாறன் உட்பட பலரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இது குறித்துஅவர் மேலும் கூறியதாவது, தமிழகத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவது தொடர்பில்,ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்துவிட்டே நான் தமிழகம் வந்தேன். தமிழகத் தலைவர்களின் கருத்துக்களை அறிந்து அது தொடர்பில் ஜனாதிபதிக்கு நான் எடுத்துக் கூறுவேன்.

இலங்கையில் நிலவும் நெருக்கடி நிலைக்குத் துரித தீர்வு காணப்பட வேண்டியது இன்றியமையாதது. இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா மௌனம் சாதித்து வருகின்றது.

இந்தியா இனப்பிரச்சினை விடயத்தில் பார்வையாளராக மட்டும் இருக்காது பங்காளியாக மாற வேண்டும். இதனையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில் இந்தியா பங்காளியாக மாறவேண்டும்.

இந்தியாவின் மத்தியஸ்தத்தைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்துள்ளனர். விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வைஏற்படுத்தி அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வரவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் இந்தியா முன்வ்ரவேணடும்.

இனப்பிரச்சினை தொடர்பிலான புலிகளின் கோரிக்கைகளை இலங்கை அரசுடன் பேசி நிறைவேற்றுவதற்கான புதிய அரசியல் சூழ்நிலையினை இந்தியா ஏற்படுத்த வேண்டும்.

புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும். தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும். எனவே இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிடுவது அவசியமாகும் என்றார். (ச-5)

# பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் மூடப்பட்டது

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட மாணவர்கள் புதிதாக உள்நுழைந்த மாணவர்களுக்கு நடாத்திய பகிடிவதையால் ஏற்பட்ட மோதலையடுத்துப் பொறியியல் பீடம் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிரேஷ்ட மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. 1997 ஆம் ஆண்டு இப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் நவப்பிரகாஷ் பகிடிவதை காரணமாக பலியானமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரிகள் இலங்கை வருவதற்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச் சபையின் உயர் அதிகாரிகள் உள்ளடங்கிய குழு இலங்கை வருவதற்கு லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் பயண அனுமதியை மறுத்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கையின் மனித உரிமைகளை சர்வதேச மன்னிப்புச் சபை பரப்புரை செய்து வருவதையடுத்து அரசு கடும் சீற்றத்திலுள்ளது.

அரசின் மனித உரிமை மீறல்களை சர்வதேச அளவில் எடுத்துரைத்து விடுதலைப் புலிகளுக்கு வலுச்சேர்க்கும் பரப்புரைகளில் மன்னிப்புச் சபை ஈடுபட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம்சுமத்தி வருகின்றது.

இதனையடுத்து சர்வதேச மன்னிப்புச் சபையின் நடவடிக்கைகளைக் கண்டித்துப் பிரித்தானியாவிலுள்ள சிங்கள மக்கள் மற்றும் இனவாதிகளை வைத்து இலங்கைத் தூதரகம் ஒரு ஆர்ப்பாட்டத்தைச் செய்திருந்தது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் நடவடிக்கையால் சீற்றமடைந்த அரசு மன்னிப்புச் சபையின் இரு உயர் அதிகாரிகளையும் கொழும்பு செல்ல அனுமதிப்பது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்பதை உணர்ந்த அரசாங்கம் லண்டன் தூதரகத்தினூடாக் பயண அனுமதியை மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## இலங்கை...

நுழைந்த போது, தமிழ் இளைஞன் ஒருவர் தமிழீழக் கொடியுடன் திடீரென மைதானத்தை வலம் வந்தார்.

இதனையடுத்து மைதானப் பாதுகாப்புப் பொலிஸார் அவரைப் பிடித்து வெளியேற்றினர். அதன் பின்னர் அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது மீண்டும் அந் நபர் மைதானத்திலுள் நுழைந்தார்.

அதன்போது மைதானப் பாதுகாவலர்கள் அவரை மடக்கிப் பிடித்து போட்டி முடிபடையும் வரை தடுத்து வைத்திருந்தனர். தமிழீழத் தேசியக் கொடி மைதானத்தில் எடுத்துச் செல்லப்பட்ட போது அங்கிருந்த ரசிகர்களும் இலங்கை - அவுஸ்திரேலிய வீரர்களும் அதிர்ச்சிக்குள்ளானதாகத் தெரிவிக்கப் பட்டது. (ச-5)

# இங்கிலாந்துடனான போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி

இங்கிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் நேற்று நடைபெற்ற சூப்பர்8 ஆட்டத்தில் 9விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ள தென்னாபிரிக்க அணி அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஸ்ரோஸ் 46 ஓட்டங்களையும் கொலின்வூட் 30 ஓட்டங்களையும் போப்பரா ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கோல் 5 விக்கெட்டுக்களையும் நெல் மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 19.2 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு.157 ஓட்டங்களை பெற்றது.

இதில் ஸிமித் ஆட்டமிழக்காமல் 89 ஓட்டங்களையும் கலிஸ் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றனர். (ச)

## கிளி.யில்...

காணப்பட்ட சில விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

தெற்குப் புதுக்குடியிருப்புப் பகுதி வற்றாப்பளை போன்ற இடங்களில் காலை 9 மணியளவில் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஜனாதிபதி...

பண்டாரநாயக்க மற்றும் சிறிபதி சூரியாராச்சி ஆகியோாரின் அமைச்சுப் பொறுப்புக்கள் கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதி ஜனாதிபதியின் கீழ்க் கொண்டு வரப்பட்டன.

எனினும் அநுரா பண்டார நாயக்க அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்டார். சிறிபதி சூரியாராட்சி பிறிதொரு வழக்கின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மங்கள சமரவீரவுடன் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச-3)

## அமெ.பல்கலை மாணவன்...

இந்த 32 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

காலை 7.15 மணியளவில் வெஸ்ற் அம்பர் என்ற 895 மாணவர்களின் தங்குமிடப் பகுதியில் முதல் துப்பாக்கிச் சூட்டில் இருவரைக் கொன்ற இந்த மாணவன் இரு மணி நேரம் கழித்து பல்கலைக்கழகத்தின் நொறஸ் என்ற கட்டடத்தில் வைத்து 32 பேரை சுட்டுக் கொன்றுள்ளான்.

இறுதியில் தனது தலையில் சுட்டு தற்கொலை செய்துகொண்டதாக நம்பப்படுகின்றது. இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் சிலரின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவர்களில் தமிழ் நாட்டைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பொறியியற் பேராசிரியர் ஜி.எஸ். லோகநாதன் என்ற தமிழரும் அடங்குகின்றார்.

இதே போன்றதொரு வெறியாட்டம் மாணவன் ஒருவனினால் 1991 அமெரிக்காவில் ரெக்ஸாஸ் என்ற மாநிலத்தில் நடைபெற்றது. அதன் போது 23 மாணவர்கள் உயிரிழந்தனர். (ச-5)

## அனைத்து சமாதான செயற்பாடு...

மலர்ந்துள்ள தமிழ்-சிங்களப் புத்தாண்டின்பின்னராவது விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

இந்த நாட்டு மக்கள் கடந்த 20 வருடங்களாக கொடிய யுத்தத்தின் காரணமாகப் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். மக்களை அந்தத் துன்பங்களிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய காலம் தற்போது மலர்ந்துள்ளது. இதனை கருத்தில் கொண்டு இரண்டு தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. வஜிர அபயவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தற்போது மிகவும் கேள்விக்குறியாகவுள்ளது. இதுவரை காலமும் புலிகள் தரைவழியாகவும் கடல் வழியாகவுமே தாக்குதல் நடத்தினர். ஆனால் தற்போது வான்வழியாகவும் புலிகள் தாக்குதல் நடத்த ஆரம்பித்து விட்டனர். இது ஆராக்கியமான விடயமாக அமையாது.

அரசாங்கம் புலிகளின் வான்வழியான தாக்குதலை எதிர்கொள்ள சிறந்த முறையில் தயாராக வேண்டும். அதேவேளை பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

காரணம் எந்த வழியில் யுத்தத்தை மேற்கொண்டாலும் இந்த நாட்டின் இனப்பிரச்சினையை யுத்தத்தால் ஒருபோதும் தீர்க்க முடியாது. கடந்த கால யுத்த வரலாறு இதனை நமக்கு நன்றாக உணர்த்துகின்றது என்றார்.

விடுதலைப்புலிகளும் முதற்தடவையாக ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு அதிகாரப் பகிர்வு முறைக்கு இணங்கினர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின்அனைத்துச் செயற்பாடுகளை அப்போதிருந்த நிறைவேற்று அதிகாரம் தவிடுபொடியாக்கிவிட்டது.

ரணில் விக்கிரமசிங்க இதுவரை ஆட்சியிலிருந்திருந்தால் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எமது நாடு ஒரு தீர்க்கமான கட்டத்திற்கு வந்திருக்கும்.தற்போது கூட நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் இருக்கின்றது. அதற்கு அரசாங்கமும் புலிகளும் நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும்.

மிக முக்கியமாக தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டிஎழுப்பும் விதத்தில் அரசாங்கம் செயற்பட வேண்டும். அரசாங்கத்தின் அனைத்து சமாதானச் செயற்பாட்டு விடயங்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியான ஆதரவை வழங்கும் என்றார். (ச)

## புங்குடுதீவில் மீட்கப்பட்ட...

காரணத்தை அறியமுடிவ துடன் சடலத்தை அடையாளம் காண முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக விசாரண மேற்கொண்டுள்ள குற்றப் புலனாய்வுத்துறையினர் யாழ்ப்பாண ஆயருக்கு உரிய விளக்கங்களையும் அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து முல்லைத்தீவில் தங்கியுள்ள, பங்குத்தந்தை ஜிம்புறவுண் அடிகளின் உறவினர்களை இப் பரிசோதனையின் போது ராகமைக்கு அழைத்துச் செல்வதற்கு யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஏற்பாடுகளை மேற்கொள்ள இணங்கியுள்ளதாக வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பிரதான புலனாய்வு அதிகாரி யாழ்ப் பாணத்தில் இடம்பெற்றமேலும் இதுபோன்ற சம்பவங்கள் குறித்து உண்மை நிலையை அறியும்நோக்கில் யாழ்ப்பாணத்திற்கு அனுப் பப்பட்டுள்ளதாக வெளியுறவுஅமைச்சுகுறிப்பிட்டுள்ளது. (ச-3)

Hatton National Bank

அடகுப் பொருட்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் அடகு சேவை வசதி பெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,

நீங்கள் பெற்ற அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒருவருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதனை அறியத் தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ.500/-) செலுத்தி காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க காலாவதித் திகதியை நீடிக்க, ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

-முகாமையாளர்

(C-008)

O/L DAY CLASS

ஆரம்பமாகி விட்டது

நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

(C-009)

இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.

MCS Supported By UNDP/JRRP

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 21-04-2007 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராசந்தி அருகே)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.